**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 643/2022**

**Witness PW 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜசேகரன் | தொழில் | |
| த/பெ | | வயது | |
| ஊர் | | தேதி | 24.07.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (24.07.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

நான் விழுப்புரத்தை சேர்ந்தவர். நான் விழுப்புரத்தில் உள்ள என் .எஸ்.கே நகரில் வசித்து வருகிறேன். நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன் . நான் ஏஜே மெட்ரிகுலேஷன் பள்ளியில் படித்தேன். நான் தற்பொழுது எதற்காக நீதிமன்றதிற்கு வந்துள்ளேன் என்று எனக்கு தெரியும். நான் சந்திரகுமார் என்பவருக்காக சாட்சியம் அளிக்கவந்துள்ளேன் என்றால் சரி. சங்கரானந்த் என்பவரும் எனது நண்பர் தான் . எப்படி நண்பர் என்றால் சந்திரகுமார் என்பவரது வாயிலாக எனக்கு சங்கரானந்த் பழக்கம். மேற்படி விவரத்தை நான் எனது பிரமான வாக்குமூலத்தில் நான் சொல்லவில் லை என்றுசொன்னால் சரி . எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சிய அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரி . சந்திரகுமார் என்பவர் கேட்டுகொண்டதற்கிணங்க நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரி. சங்கரானந்த் என்பவர் ஆங்கில ஆசிரியராக பேரங்கியூர் என்ற ஊரில் இருந்தார் என்றால் சரி. சங்கரானந்த் என்பவருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது . சங்கரானந்த் என்பவர் இறந்த விவரம் எனக்கு தெரியும். எப்படி தெரியும் என்றால் சந்திரகுமார் என்பவர் மூலமாக தெரியும் . சந்திரகுமார் என்பவருக்கு தான் சங்கரானந்த் இறந்த உடனே முதல் தகவல் வந்துள்ளது . எனக்கு சந்திரகுமார் மற்றும் சங்கரானந்த் என்பவரின் நண்பரான ராம்பிரசாத் என்பவரது வாயிலாக தகவல் கிடைத்தது. சங்கரானந்த் என்பவர் எப்படி இறந்தார் என்றால் அவர் தற்கொலை செய்து கொண்டார். சங்கரானந்த் என்பவருக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் அவருக்கு சொந்தமாக வீடு உள்ளது. சங்கரானந்த் என்பவரது பெயரில் பூர்வீக

சொத்துக்கள் இருந்தது. சங்கரானந்த் என்பவரது பெயரில் தனியாக சொத்துக்கள் இல்லை என்றால் சரி. சங்கரானந்த் என்பவருக்கு பூர்வீக வீடு இருந்ததாக நான் சொல்வது பொய் என்று சொன்னால் அந்த வீட்டை விற்பனை செய்துவிட்டனர் . எப்பொழுது விற்பனை செய்தார்கள் என்றால் 2018 அல்லது 2019 ம் வருடம் விற்பனை செய்திருப்பார்கள் . சங்கரானந்த் என்பவர் அவரது பெயரில் இருந்த சொத்துக்களை விட்டுவிட்டு இறந்திருந்தால் மட்டுமே அந்த சொத்தின் மீது வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது . சங்கரானந்த் என்பவர் சந்திரகுமாரிடம் என்று பணம் கேட்டார் என்று சொன்னால் 2020 ம் வருடம் பொங்கல் முடிந்த பிறகு என்னிடம் பணம் கேட்டார் நான் என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன் உடனே சங்கரானந்த் என்பவர் சந்திரகுமார் என்பவரிடம் பணம் கேட்டிருப்பதாகவும் என்னை கொஞ்சம் சொல்ல கூறினார். நான் ஜனவரி மாதம் 27, 28 ம்தேதி சந்திரகுமார் என்பவரிடம் சங்கரானந்த் என்பவர் பணம் கேட்கிறார் என்றும் அவருக்கு பணம் கொடுக்கும்படி கூறினேன் . சந்திரகுமார் என்பவர் பிப்ரவரி முதல் வாரத்தில் பணம் கொடுப்பதாக கூறியதாக சங்கரானந்த் என்னிடம் கூறினார் . பிப்ரவரி 4, அல்லது 5 தேதிக்குள் பணம் கொடுத்தார் . சங்கரானந்த் என்பவர் என்னை வந்துஅழைத்து சென்றார் . நான் சந்திரகுமார் வீட்டிற்கு சென்றோம் அது ஸ்ரீராம் நகரில் உள்ளது. அப்பொழுது நேரம் காலை 8 மணி இருக்கும். நான் சென்றிருந்தேன் அன்றைய தினம் சங்கரானந்த் என்பவருடன் அவர் நண்பர் ஒருவர் வந்திருந்தார். சந்திரகுமார் இருந்தார். ஆன்ட்ரோ பிளமின் ராஜ் என்பவர் அங்கு இருந்தார் அவரை ராஜ் என்று நாங்கள் அழைப்போம் . அவர் பெயிண்ட் வேலை மற்றும் பிளம்பிங் வேலை செய்து வருகிறார் . சங்கரானந்த் நண்பர் தான் பாண்டினை எழுதினார் . அவரை அன்று தான் நான் பார்த்தேன் . ஆன்ட்ரோ பிளமின் ராஜ் வந்திருந்தார் என்ற விவரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரி . சங்கரானந்த் என்பவர் அழைத்து வந்த நபர்தான் வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதினார் என்ற விவதத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரி. பாண்டு, பேப்பர், ஸ்டாம்ப் ஆகியவற்றை சந்திரகுமார் வைத்திருந்தார் . பாண்டை கொடுப்பதற்கான வாசகத்தை சந்திரகுமார் எ ன்பவர் தான் சொன்னாரா என்றால் இல்லை சங்கரானந்த் என்பவர் தான் கூறினார். மேற்படி விவரத்தை நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை எ ன்று சொன்னால் சரி. அந்த ஆவணத்தை எழுதியவுடன் சங்கரானந்த் என்பவர் கையொப்பம் செய்தார் இரண்ட கையொப்பம் செய்தாரா அல்லது ஒரு கையொப்பம் செய்தாரா என்பது தெரியவில்லை . அவர் கையொப்பம் செய்யும்போது நான் இருந்தேன் அந்த விவரத்தைது நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரி. சங்கரானந்த் என்பவர் சந்திரகுமார் என்பவரிடம் கடன் வாங்கினார்

என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல . 2020 ம் வருடம் மனை வாங்குவதற்காக தான் கடன் வாங்கினார் என்று நான் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் சந்திரகுமார் என்பவரும் சேர்ந்து சங்கரானந்த் என்பவர் இறந்துவிட்டதால் பிரதிவாதிகளிடம் இருந்து பணத்தை அபகரிக்கும் பொருட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல . உண்மையில் சங்கரானந்த் கடன் வாங்கியிருந்தால் அவர் உயிருடன் இருந்த சமயத்தில் பிரதிவாதியிடம் சொல்லியிருப்பார் என்று சொன்னால் சரியல்ல . சங்கரான்ந்த என்பவர் சந்திரகுமாரிடம் பணம் வாங்கினார் . சங்கரானந்த் என்பவர் தமிழில் தான் கையொப்பம் செய்வார் . வா.சா.ஆ 1ல் எழுதியவர் என்று இல்லை என்று சொன்னால் சரி . கையெழுத்தின் கீழ் எனது தகப்பனார் பெயர் மற்றும் முகவரி இல்லை என்றால் சரி . இரண்டாவது சாட்சி கையொப்பத்தின் கீழும் அவரது தகப்பனார் பெயர் மற்றும் முகவரி இல்லை என்றால் சரி . வா.சா.ஆ 1 உண்மையாகவே எழுதப்பட்டிருந்தால் அதில் எனது தகப்பனார் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லோருக்கும் எனது பெயர் தெரியும் என்பதால் முகவரி சொல்லப்படவில்லை . சங்கரானந்த் என்பவரதுபெயரில் எந்த வித சொத்துக்களும் இல்லாத காரணத்தினால் பிரதிவாதிகளிடம் இருந்து பணத்தைகோருவதற்கு வாதிக்கு எந்தவித உரிமையும் மற்றும் வழக்கு மூலம் என்று சொன்னால் சரியல்ல . பொது குடும்பத்திற்காக கடன் வாங்கியதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல . சங்கரானந்த் என்பவரது வாரிசுகளிடம் இருந்து வழக்கு தொடர்ந்து கடனை வசூல் செய்ய எந்த வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சங்கரானந்த் என்பவர் இறந்த பிறகு அவரிடம் இருந்து சொத்தினை அபகரிக்க வேண்டும் என்ற காரணத்தினால் நானும் வாதியும் தவறான படி வா .சாஆ 1 னை தயார் செய்துள்ளோம்எ ன்று சொன்னால் சரியல்ல . வா.சாஆ 1 க்காக சங்கரானந்த் என்பவர் வாதியிடமிருந்து எந்தபணத்தையும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல . வாங்காத பணத்திற்கு வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்குசட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல . அதனால் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi/-)
I Additional Subordinate Judge,
Villupuram